2008 மே 5]

197—

முதலைகள்

***24270—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, சிதம்பரநாதபுரம் அழிஞ்சியாற்றிலுள்ள முதலைகளை உயிரியல் பூங்காவில் ஒப்படைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, சிதம்பரநாதபுரம் கிராமத்தின் அருகே செல்லும் அழிஞ்சியாற்றில் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்திலே ஏற்பட்ட மழை வெள்ளத்தால் எங்கிருந்தோ ஒரு பெரிய முதலை வந்து அழிஞ்சியாற்றின் கரையில் தினந்தோறும் மேய்ந்துகொண்டிருந்த விவசாயிகளின் ஆடுகளைப் பிடித்துக் கொன்று, உணவாக உட்கொண்டது. தற்சமயம் அழிஞ்சியாற்றில் தண்ணீர் குறைய ஆரம்பித்தவுடன் மெல்ல நகர்ந்து பக்கத்திலே கொள்ளிடம் வடிகால் ஆற்றில் வண்ணான்குட்டை என்ற இடத்தில் இன்றைக்கும் அந்த முதலை நடமாடிக்கொண்டிருக்கிறது. அதுபோன்று சீர்காழி தொகுதி பட்டியவேடு ஏத்தக்குடி பக்கமுள்ள கொள்ளிடம் ஆற்றுக் குட்டையில் மற்றொரு முதலை உள்ளது. மனிதர்கள் யாரையும் கடித்துவிடாமலும், அதேபோன்று கால்நடைகளை, ஆடுகளைக் கொன்றுவிடாமல் பாதுகாக்கவும், இந்த முதலைகளை உடனடியாகப் பிடித்து அரசு முதலைப் பண்ணைகளில் ஒப்படைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே விடையிலே கூறியதைப்போல, அந்த

முதலைகளையெல்லாம் பிடித்து சாத்தனூர் அருகில் இருக்கின்ற முதலைப் பண்ணையிலே விடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 198, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

198—

சாலை அரிப்பு

***10134—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு தொகுதி, பட்டணங்கால் சாலையில் பொன்மனை முதல் இடைக்கட்டான் வரை சாலையின் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள அரிப்பினைச் சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவட்டாறு தொகுதி, பட்டணங்கால் சாலையில் பொன்மனை முதல் இடைக்கட்டான் வரை சாலையின் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள அரிப்பினை நிரந்தரமாகச் சரி செய்ய சாலையின் இருபுறமும் தடுப்புச் சுவர் கட்ட வேண்டும். இதற்காக தனியார் நிலம் தேவைப்படுவதால் இச்சாலையை முழுமையாகச் சரி செய்ய தற்சமயம் இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பட்டணங்கால் சாலை என்பது கனரக வாகனங்கள் செல்லும் முக்கியமான குலசேகரம்–சுருளோடு சாலையாகும். மலைப் பகுதிச் சாலையுமாகும். குலசேகரம்–அரசுமூடு முதல் மங்கலம், இடைக்கட்டான், பொன்மனை பகுதி என்பது பட்டணங்கால் சாலையின் பகுதியாகும். பல இடங்களில் அரிப்பு ஏற்பட்டு போக்குவரத்துக்கு தடை ஏற்படுவதோடு, விபத்துகளை ஏற்படுத்தும்